சைதாப்பேட்டையில் ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில்

நவீன ஆட்டிறைச்சிக் கூடம் தரம் உயர்த்த நடவடிக்கை!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, பிப்.16-

சென்னை மாநகராட்சி நிர்வாகம் - 20 கிரவுண்ட் இடத்தில் ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன ஆட்டிறைச்சிக் கூடம் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் சென்னை, சைதாப் பேட்டை, ஆடு இறைச்சி கூடத்தில் நடைபெறவுள்ள மேம்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வு நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தாவது;

சைதாப்பேட்டை ஆடு இறைச்சிக் கூடம் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பாட்டில் இருந்து வருகிறது. மிகப்பெரிய அளவில் தென்சென்னை பகுதியில் இருக்கும் ஆட்டிறைச்சிக் கூடமாக இது விளங்கி வருகிறது. 2008 ஆம் ஆண்டு தற்போதைய முதலமைச்சர் அவர்கள் அப்போதைய துணை முதலமைச்சராக இருந்தபோது, இந்த ஆட்டிறைச்சிக் கூடத்தை ISO தரச் சான்றிதழ் பெறப்பட்ட நவீன ஆட்டிறைச்சிக் கூடமாக தரம் உயர்த்தித் திறந்து வைத்தார்கள். தினந்தோறும் 300க்கும் மேற்பட்ட ஆடுகள், ஒவ்வொரு மாதமும் 10,000 ஆடுகள் இங்கே இறைச்சிக்காக அறுக்கப்பட்டு வருகிறது.

தென் சென்னை பகுதி 9 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள், 25 ஊராட்சிகள் ஆகியவை 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியோடு இணைந்து பெருநகர சென்னை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 174 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் இருந்த சென்னை தற்போது 420 க்கும் மேற்பட்ட சதுரகிலோ மீட்டராக விரிவடைந்து ள்ளது. சோழிங்கநல்லூர், உள்ளகரம், புழுதிவாக்கம், மடிப்பாக்கம், பள்ளிக்கரணை போன்ற பல்வேறு பகுதிகளுக்கு இந்த கூடத்திலிருந்து ஆட்டிறைச்சி அனுப்பப்படுகிறது.

இந்நிலையில் ஆட்டிறைச்சி கூடம் நவீனபடுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது. சைதாப்பேட்டையில் உள்ள இந்த நவீன ஆட்டிறைச்சி கூடத்தை ஒட்டி 9 கிராவுண்ட் இடம் கடந்த ஆட்சி காலத்தில் குப்பை கொட்டும் இடமாக இருந்தது. இது அடர்த்தியான பொதுமக்கள் வசிக்கும் இடமாக இருந்ததால் குப்பை கொட்டும் இடம் இடமாற்றம் செய்யப்பட்டது. இதணையொட்டி 2 கிராவுண்ட் இடத்தில் மாநகராட்சியின் சிறிய கட்டிடங்கள் உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகம், 20 கிராவுண்ட் இடத்தில் ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் இந்த ஆட்டிறைச்சி கூடத்தை மேம்படுத்தி நவீன ஆட்டிறைச்சி கூடமாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் சிறிய அளவிலான கடைகள், கழிவுகளை சுத்திகரிக்கும் வசதி ஆகியவைகளும் அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் தென்சென்னை பகுதியில் சட்டத்திற்கு புறம்பாக ஆடுகள் அறுப்பது தவிர்க்கப்பட்டு, இந்த நவீன கூடத்தை பயன்படுத்தும் நிலை ஏற்படும்.

அண்ணாமலையின் தவறான குற்றச்சாட்டிற்கு பதில்!

என்னுடைய ஒவ்வொரு நிமிட செயல்பாடுகளும் தினந்தோறும் என்னுடைய சமூக வளைதளத்தில் பதிவேற்றம் செய்து வருகிறேன். அண்ணாமலை பொருந்தாத காரணங்களை தினந்தோறும் கூறி வருகிறார். கடந்த 2 நாட்களுக்கு முன்னர் நல்ல மனிதர் கஞ்சா கருப்புவிற்கு நல்லது செய்ய முடியவில்லை என்று கூறினார். ஆனால் நேற்றைக்கு கஞ்சா கருப்பு அவர்கள் பொது நிகழ்ச்சியில் என்னை நேரில் சந்தித்து, தவறான தகவலை கூறியதற்காக வருத்தப்படுகிறேன். இந்த அரசு சரியாக அனைத்து விஷயங்களையும் கையாண்டு வருகிறது என்றும், தன்னை மன்னிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். இதற்கு அண்ணாமலை என்ன கூறப்போகிறார் என்று தெரியவில்லை.

மேலும், அரசு மருத்துவமனைகளில் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாக கூறிவருகிறார். தற்போது அரசு மருத்துவமனைகளின் சிகிச்சை அளிக்கும் தரம் உயர்த்துள்ளதால், அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் அவர் தமிழ்நாடு அரசு நடத்தும் அரசு மருத்துவமனைகளை மட்டுமே குறிப்பிட்டு இந்த தகவலை கூறிவருகிறார். ஒன்றிய அரசு நடத்தும் அரசு மருத்துவமனைகளில் இறப்புகள் இல்லாத நிலை உள்ளதா? எல்லோரும் மார்கண்டேயர்களாக வாழ வைக்கிறார்களா? 90 வயது கடந்தவர்கள், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று பலனளிக்காமல் அரசு மருத்துவமனைகளுக்கு வரும் ஒரு சிலர் சிகிச்சை பலனளிக்காமல் இறப்பது என்பது இயல்பு. இதற்காக அரசு மருத்துவமனைகளில் இறப்புகள் அதிகரித்து வருகிறது என்று பொதுவான குற்றச்சாட்டை ஏற்க முடியாது.

எந்த மருத்துவமனையில் மருத்துவர்களின் அலட்சியத்தால், மருத்துவர்கள் பற்றாக்குறையால் இறப்புகள் ஏற்பட்டது என்ற புள்ளிவிவரத்தோடு தகவலை அவர் தெரிவித்தால் அவரோடு நேருக்கு நேர் வாதிட நான் தயாராக இருக்கிறேன். அரசு மருத்துவ சேவையின் தரத்தை மக்களிடத்தில் குறைத்து மதிப்பிடுகிற

வகையிலான இதுபோன்ற அறிக்கைகள் பெரிய அளவிலான அரசு மருத்துவ நிர்வாகத்தை பாதிக்கும் என்பதை உணராமல் எப்படி அவர் சொல்கிறார் என்று எனக்கு புரியவில்லை.

மேலும், கடந்த 2 நாட்களுக்கு முன்னால் திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு செய்தி குறித்து கூறியிருக்கி றார். திருநெல்வேலி மாவட்டத்தில் அந்த மருத்துவக் கல்லூரியின் முதல்வர் ஒரு அறிக்கையை தந்திருக்கிறார். அவ்வறிக்கையின்படி திருவேங்கடம் தாலுகா மலைப்பட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த மகேந்திரன் என்பவரின் நான்கு வயதுக் குழந்தையான பொன்மாறன் என்பவர் கழுத்தில் உள்ள நிணநீர்க்கட்டி (Lymph nodes) கடந்த ஒருமாதமாக சங்கரன்கோவில் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

அந்தக் கட்டி சரியாக குணமடையாததால் பரிசோதனைக்காவும், மேல் சிகிச்சைக்காகவும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. அந்தக் குழந்தை 10.02.2025 திங்கள் அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அந்தக் கட்டியை குழந்தை அறுவை சிகிச்சை நிபுணர்கள் பரிசோதித்த போது அது லிம்போமா என்னும் புற்றுநோயாக இருக்கவாய்ப்புள்ளது என எடுத்துரைக்கப்பட்டது. அதற்காக அல்ட்ராசவுண்ட் பரிசோதனை வயிற்றுப் பகுதியில் செய்யப்பட்டது. அந்தப் பரிசோதனையில் வயிற்றின் உள்பகுதியிலும் நிணநீர்க்கட்டிகள் (Lymph nodes) நிறைய இருப்பது அறியப்பட்டது.

எனவே நோயின் பரவலை அறிவதற்காகவும், மயக்க மருந்து சிகிச்சைக்காகவும் CT contrast கழுத்து மற்றும் நெஞ்சுப் பகுதிக்கு செய்யப்பட்டது. Contrast மருந்து (Low Osmolar Non Ionic Iohexol) செலுத்துவதன் மூலம் திசுக்கள் மற்றும் நோய் கட்டிகளுக்கு உள்ள வேறுபாடு நன்றாக தெரியும். அதனால் contrast 14 ml (Weight14kg (1ml/kg) B.Sc Radiodiagnosis Imaging Technology Intern மூலமாக தொழில்நுட்ப வல்லுநர் (TNMSC Employee) மற்றும் மருத்துவர் முன்னிலையில் செலுத்தப்பட்டது.

மிகப்பெரிய வடிகட்டிய பொய்!

ஆனால் எதிர்பாராத விதமாக குழந்தைக்கு கான்ட்ராஸ்ட் மருந்து போடும் போது ஒவ்வாமை (Anaphylaxis) ஏற்பட்டது. அதனால் consoleல் இருந்த மருத்துவரின் அறிவுரைப்படி உடனடியாக தீவிர சிகிச்சை அறைக்கு கொண்டு செல்லப்பட்டான். துவிர சிகிச்சைப் பிரிவில் மயக்கவியல் நிபுணர், இதய நோய் வல்லுநர், மூளை நரம்பியல் நிபுணர் ஆகியோரின் அறிவுரைகள் பெறப்பட்டு அதன்படியே சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

தீவிர சிகிச்சை அளித்தப் பின்னரும் குழந்தையானது நோயின் தீவிரத்தால் 12.20.2025 அன்று இரவு 9.10 மணியளவில் மரணடைந்தார். இந்த நிலையில் மருத்துவர்கள் இல்லாததால் மருத்துவமனையில் குழந்தை இறந்திருக்கிறது என்கின்ற மிகப்பெரிய வடிகட்டிய பொய்யை ஒரு கட்சியின் மாநிலத்தலைவர் சொல்வது என்பது எந்த அளவுக்கு சரி என்பது தெரியவில்லை. யாராவது ஒரு மருத்துவர்களையாவது கேட்டு தெரிந்துகொண்டு இதுபோன்ற அறிக்கைகளை அவர் வெளியிட்டால் நன்றாக இருக்கும்.

மருத்துவர் பணியிடங்கள் நிரப்புவது தொடர்பாக:

மேலும் மருத்துவர் காலிப்பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும் என்று திரு.அண்ணாமலை அவர்கள் சொல்லியிருக்கிறார். காலிப்பணியிடங்கள் தொடர்ச்சியாக நிரப்பப்பட்டு வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 24,000க்கும் மேற்பட்ட மருத்துவ காலிப்பணியிடங்கள் கடந்த 4 ஆண்டுகளில் நிரப்பப்பட்டு ள்ளது. 1,021 மருத்துவர்கள், 986 மருந்தாளுனர்கள், 1000க்கும் மேற்பட்ட செவிலியர்கள் என்று 24,000க்கும் மேற்பட்ட மருத்துவ காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

இப்போதுகூட இன்று வரை காலியாக உள்ள மருத்துவ பணியிடங்களின் எண்ணிக்கை 2,553. இந்த நிலையில் 2,553 மருத்துவர்களை பணியில் அமர்த்துவதற்கு கடந்த மாதம் ஜனவரி 5ஆம் தேதி தேர்வு நடைபெற்றது. ஆன்லைன் தேர்வை மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் (MRB) நடத்தி தேர்வு முடிவுகள் வெளிவந்து அதில் 4,585 பேருக்கு சான்றிதழ் சரிபார்ப்பு பணி நடைபெறுகிறது. 2,553 இடங்களும் இப்போது காலியாக இருக்கிற 89 இடங்களுடன் சேர்த்து 2642 மருத்துவர்களை நியமிப்பதற்குறிய சான்றிதழ் சரிபார்ப்பு 12, 13, 14, 15 ஆகிய 4 நாட்கள் நடைபெறுகிறது.

நாளையோடு இந்த சான்றிதழ் சரிபார்ப்பு முடிந்தவுடன் அவர்களுக்கான ரேங்கிங் போடப்படும். சாதிவாரி இடஒதுக்கீட்டின் அடிப்படையில் கலந்தாய்வு நடத்தி அவரவர் விரும்புகிற இடத்தில் வெளிப்படைதன்மையாக பணி ஆணைகள் வழங்கப்படவிருக்கிறது. இப்படி சிறப்பாக செயல்பட்டு வரும் மருத்துவ கட்டமைப்பை பற்றி தவறாக கூறி அரசு மருத்துவ சேவைக்கு அவர் குந்தகம் விளைவிக்கிறார், மேலும் ஏதோ ஒரு தனியார் அமைப்பிற்கு ஆதரவாக செயல்பட முனைந்திருக்கிறார் என்றே நான் குற்றம் சாட்டுகிறேன்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், துணை ஆணையர் (பணிகள்) சிவகிருஷ்ணமூர்த்தி, வட்டார துணை ஆணையர் (தெற்கு) அமீத், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், நகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி நகராட்சி, தியாகதுருகம் சாலை வி.எம். திடலில் 3வது கல்லை புத்தகத் திருவிழாவினை தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்த விழாவில், ரிஷிவந்தியம் அரசு மேல்நிலைப்பள்ளி 6ஆம் வகுப்பு பயிலும் மாணவன் 1330 திருக்குறளை எழுதி அய்யன் திருவள்ளுவரின் உருவத்தினை வரைந்தப் படத்தினைப் பார்வையிட்டு மாணவனுக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார், இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில்

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

மாவட்டப் பொறுப்பாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பூர், பிப்.16-

திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகத்தின் பொறுப்பாளராக தலைமைக் கழகத்தால் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களாலும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் நியமனம் செய்யப்பட்டதை தொடர்ந்து நாளை (17.02.2025 - திங்கள்கிழமை) காலை 08.00 மணியளவில் திருப்பூரில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் முதன் முத

லில் சந்தித்த இடமான திருப்பூர் இரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி (திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் ஆகிய) எனது தலைமையில் நடைபெற உள்ளது.

அது சமயம் திருப்பூர் கிழக்கு மாவட்டதிற்குட்பட்ட மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள், மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் திரளாக பங்கேற்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில்,

மோடி அரசைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

கோவி.லெனின் – புதுக்கோட்டை விஜயா சிறப்புரை! மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், பிப். 16 -

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், மத்திய பா.ஜ.க. மோடி அரசைக் கண்டித்து, குன்னம், கலைஞர் திடலில் நடைபெற்றது. ஓரவஞ்சனையான நிதிப்பகிர்வு, தமிழ்நாட்டின் முக்கிய திட்டங்கள் புறக்கணிப்பு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும் எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகிவற்றிற்கு நிதி ஒதுக்காதது, ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட ச்சரிக்காதது எனத் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து பெரும் கண்டன பொதுக் கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டம் ,குன்னம் கலைஞர் திடலில், நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் தகவல் தொழில் நுட்ப அணி மாநில ஆலோசகர் வி.லெனின் மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள் .

இதில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப . பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், ஆர். முருகேசன், அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ர விச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ண மூர்த்தி, எம்.ராஜ் குமார், எஸ்.நல்லதம்பி, தி. மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர் ந.ஜெகதீஷ்வரன், டாக்டர் செ.வல்லபன், மொழிப் போர் தியாகி மூங்கில்பாடி ரெங்கராஜ், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமிசேகர், ஏ.எம்.ஜாகிர்உசேன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் .ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி..ஆர். சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன்,

மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன், ஆர்.அருண், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் கவிஞர்.முத்தரசன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்.கமல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எ.ரசூ ல்அகமது,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. இராசா மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ. ரமேஷ், முன்னாள் பெருந் தலைவர்கள் பிரபா செல்லப் பிள்ளை, .ராமலிங்கம்,

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. இராசா, மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தர்ராஜ், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர்கள் கோபாலபுரம் செல்வராஜ், தலைமை கழக பேச்சாளர் மு.விஜயரத்தினம்,

பாளை.மணிவண்ணன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் எஸ்.செல்வகுமார், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம். ரெங்கராஜ், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் தம்பை.தர்மராஜ்,

மாவட்ட பிரதிநிதி எஸ். அழகுவேல், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா மற்றும் வனிதா சுப்ரமணியன், ஆர்.வினோத், சீனிவாசன்,

குன்னம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் தனலெட்சுமி மதியழகன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் உமா சந்தோஷ் குமார்,

உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி நன்றியுரை யாற்றினார்.

நேற்று (15.02.2025) மிழ்நாடு மின் வாரிய நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன் வடசென்னை அனல் மின் நிலையம் நிலை 1 மற்றும் 2 இல் மின் நிலையை செயல்பாடுகளை கள ஆய்வு செய்து நிலக்கரி கையாளும் இடங்களை பார்வையிட்டார். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி கழக மேலாண்மை இயக்குநர் மரு. ஆல்பி ஜான் வர்கீஸ், இயக்குநர் (திட்டம்) க.கருக்குவேல்ராஜன் மற்றும் இயக்குநர் (தொழில் நுட்பம்) உற்பத்தி எம். செந்தில் குமார் ஆகியோர் உள்ளனர்.

கடலூர் மேற்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர்

துரை. கருப்புசாமி தந்தை வே.துரைசாமி மறைவு!

கழகத்தினர் – பொதுமக்கள் அஞ்சலி!

கடலூர் பிப்ரவரி 16.

கடலூர் மேற்கு மாவட்ட முன்னாள் இளைஞரணி அமைப்பாளர் நல்லூர் வடக்கு ஒன்றியம் என். நாரையூர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் துரை. கருப்புசாமியின் தந்தை வே.துரைசாமி (வயது 96) அவர்கள் வயது மூட்பு காரணமாக நேற்று (15.02.2025) சனிக்கிழமை பிற்பகல் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருகிறோம்.

தகவல் அறிந்ததும் கடலூர் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் நல்லூர் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

அன்னாருக்கு பாக்கியம் என்ற மனைவியும் இளவரசி என்ற ஒரு மகளும் துரை.கருப்பசாமி என்ற ஒரு மகனும் உள்ளனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (16.02.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில் வேப்பூர் அருகில் உள்ள நாரையூர் கிராமத்தில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு அங்கு உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.